[1978 மார்ச் 28

திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில் குறிப்பிட்டதைப் போல தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் இதைப்போன்ற மின் இணைப்புக் கொடுப்பதில் மிக அதிக அளவில் கொடுக்க முடியாமல் இருக்கிறது. அதற்குரிய காரணம் நிலத்தடி நீர் என்று சொல் கிறார்கள். தயவுசெய்து அதை மறுபரிசீலனை செய்து எல்லா இடங்களுக்கும் இந்த மின்னிணைப்பு தருவதற்கு அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, காரணம் அது மட்டுமல்ல. நம்மிடத்திலே இருக்கின்ற மனுக்கள் இரண்டேகால் இலட்சம். ஆண்டு ஒன்றுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படும் பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 25,000 இலிருந்து 35,000 வரை. ஆகவே, இருக்கின்ற மனுக்களுக்கே இன்னும் ஏழெட்டு ஆண்டுகளுக்கு வேலை இருக்கிறது.

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, மின்னிணைப்பு கொடுக்கும்பொழுது அரசு என்ன நடைமுறைகளைக் கடைப் பிடித்து மின்னிணைப்பு கொடுக்கிறது. இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மனுக்கள் இருப்பதாகக் கூறினார்கள். அப்படியென்றால் சிறு நில விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறதா? ஏற்கெனவே மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டவர்களுக்கும் மீண்டும் கொடுக்காமல் புதியதாக மனுச் செய்பவர்களுக்குக் கொடுக்கக் கூடிய முறையைக் கடைப்பிடிக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மின் வாரியத்தினால் சேங்ஷன் செய்யப்பட்ட மனுக்கள் ஏற்கனவே நிறைய இருக்கின்றன. ஆகையினாலே சேங்ஷன் செய்யப்பட்ட திட்டங்களுக்கு இப்பொழுது மின்சாரம் வழங்கப்படுகிறது. சிறு விவசாயிகளுக்கு அதிலே முன்னுரிமை வழங்க வேண்டுமென்று அரசு தெரிவித்திருக்கிறது.

தமிழாசிரியர்களுக்கு ஊக்க ஊதியம்.

*686. வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஆசிரியர்களாக பணிபுரியும் நிலையில் பி.ஏ., பி.டி. பட்டம் பெற்றும் உரிய பதவியுயர்வு கிடைக்காத நிலையில் அவர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்குவது போல் தமிழில் பட்டம் பெற்றவர் களுக்கும் ஊக்க ஊதியம் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பி.ஏ., பட்டம் மட்டும் பெற்றால் அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்படுவதில்லை. அவ்வாசிரியர்கள் பி.ஏ., பட்டம்

1978 மார்ச் 28]

பி.டி. பட்டம் ஆகிய இரண்டும் பெற்ருல்தான் ஊக்க உயர்வு அளிக்கப்படுகிறது. புலவர் அல்லது வித்வான் பட்டம் மட்டும் பெறும் ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு அளிக்க ''ஊக்க ஊதிய உயர்வு திட்டத்தின் கீழ்'' இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பி.ஏ., பி.டி., பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுவதைப் போலவே தமிழ் பயின்ற தமிழ்ப் புலவர்களுக்கும் அத்தகைய முறையினை விரிவுபடுத்த இனியேனும் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பி.ஏ. அல்லது பி. ஓ. எல். பட்டம் பெற்று முதல் நிலை தமிழாசிரியர்களானவர்கள் எம். ஏ. பட்டம் பெற்ருல் இரண்டு ஊக்க ஊதிய உயர்வும், எம். எட். பட்டம் பெற்ருல் மற்றும் ஒரு முறை இரண்டு ஊக்க ஊதிய உயர்வும் அளிக்கப்படுகின்றது. வித்வான் அல்லது புலவர் பட்டமும், தமிழாசிரியர் பயிற்சி அல்லது செகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சி பெற்று முதல் நிலை அல்லது இரண்டாம்நிலை தமிழாசிரியர்களானவர்கள் பி.டி. பட்டம் பெற்ருல் இரண்டு ஊக்க ஊதிய உயர்வும், ஏம்.ஏ. பட்டம் பெற்ருல் மற்றுமொருமுறை இரண்டு ஊக்க ஊதிய உயர்வும் அளிக்கப்படுகின்றது.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றுகின்ற பட்டதாரி ஆசிரியர்கள் எம்.ஏ., பட்டம் பெற்ருல் அவர்களுக்கும் ஊக்க உயர்வு அளிக்கப்படுகிறது. ஆனுல் வெளி சர்வகலாசாலைகளில், பட்டப்படிப்பு எம்.ஏ., படிக்கும் பொழுது அங்கே ''தேர்ட் கிளாஸ்'' டிகிரி கொடுக்கிருர்கள். நமது யூனிவர்சிட்டியில் அது கிடையாது. செகண்ட் கிளாஸ் வரையில்தான் இருக்கிறது. ஆனுல் தேர்ட் கிளாஸ் பட்டதாரிகளுக்கும் ஊக்க ஊதிய உயர்வு கொடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. கூ. ச. முருகேசன் : துணைத் தலைவரவர்களே, நமது மாநிலத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் எல்லாம் அதிகமாக பி.ஏ., பி.டி., ஆசிரியர்கள் இருக்கிருர்கள். ஆனுல், ஊதிய விகிதத்தைப் பார்த்தால் உயர்நிலைப் பள்ளியிலே பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் பெறுகின்ற அளவிற்குச் சம்பளம் இவர்களுக்குக் கிடையாது. அந்த நிலைமையை இந்த அரசு சரி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அவர்கள் செய்கின்ற வேலைக்குத்தான் சம்பளம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.